**Copy of Deposition**

**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.**

**அ.வ.எண்.137/2024 நாள்:08.06.2026**

**வா.சா:– 1சுப்ரமணி ஆஜர், சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

குறுக்கு விசாரணை ( பிரதிவாதி தரப்பில்):–

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வாதி பார்வதிக்கு உறவினர் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு போட்டுள்ள சொத்தின் பூர்வீக முறையில் உரிமை எதுவும் இல்லை என்றால் சரிதான். வாதி பார்வதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அடமான பத்திரமோ, குத்தகைக்கு பத்திரம் எழுதி கொடுத்து எனது சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான். இந்த சொத்துக்கள் பூர்வீக முறையில் எந்த வம்சாவளி அடிப்படையில் வரப்பெற்றது என்று பார்வதி தெரியப்படுத்தவில்லை என்றால் தெரியப்படுத்தினார். எழுத்து மூலமாக தெரியப்படுத்தினாரா என்றால் வாய்மொழியாக தெரியப்படுத்தினார். ஆவணங்களை எப்போது பார்த்தேன் என்றால் காடு கிரையம் பேசும்போது பார்த்தேன். கிரையம் எவ்வளவு தொகை சொல்லி யார் மூலம் பேசப்பட்டது என்றால் பழனிச்சாமி முன்னிலையில் பேசப்பட்டது. எந்த தேதியில் பேசப்பட்டது என்றால் தேதி ஞாபகம் இல்லை. எங்கு வைத்து பேசப்பட்டது என்றால் பார்வதி வீட்டில் வைத்து பேசப்பட்டது. பார்வதி வீட்டில் வைத்து பேசும்போது யார் உடன் இருந்தார்கள் என்றால் பார்வதி, பழனிச்சாமி, துரைசாமி ஆகியோர்கள் உடன் இருந்தனர். தாவாவின் சிட்டா, அடங்கல் வருவாய் துறை ஆவணங்கள் பார்வதி எடுத்தாரா என்றால் நான்தான் எடுத்தேன். எவ்வளவு விஸ்தீரண பூமி என்று அளந்து பார்த்தேனா என்றால் அளக்கவில்லை. எழுத்து மூலமாக கிரைய அக்ரிமெண்ட் போட்டோமா என்றால் சரிதான். அந்த அக்ரிமெண்ட் ஆவணத்தை யார் தயாரித்தார்கள் என்றால் சதாசிவம் பத்திர எழுத்தர் தயாரித்தார். அந்த சொத்தில் வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். வில்லங்கம் இருந்த விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 2ம் பிரதிவாதி சொத்தை ஜப்தி செய்திருந்த விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வள்ளியம்மாள் எப்போது இறந்தார் என்றால் 2014ல் இறந்தார், தேதி

## Copy of Deposition

தெரியாது. வள்ளியம்மாள் எந்த ஊர் என்றால் வட்டக்கல் வலசு. வள்ளியம்மாளின் வாரிசுகளின் விவரங்கள் நேரடியாக ஆவணங்களை பார்த்து நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் வாரிசு சான்றிதழை நான்தான் எடுத்தேன். நான்தான் மனுதாக்கல் செய்தேனா என்றால் பார்வதி மனு தாக்கல் செய்தார். வாரிசு யார், யார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வள்ளியம்மாளின் வாரிசுகள் பார்வதி, செங்கோட்டு வேல் என்றால் சரிதான். செங்கோட்டு வேல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். செங்கோட்டு வேலின் வாரிசுகள் மனைவி கலாதேவி, மகன் லிவின் குமார் ஆவார்கள். அவர்களுக்குள் சொத்துக்கள் பாகப்பிரிவினை ஆகிவிட்டதா இல்லையா என்று நான் ஆவணங்கள் மூலம் தெரிந்து கொள்ளவில்லையா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. இன்றுவரை இந்த சொத்துக்களின் உரிமையாளர் வள்ளியம்மாளின் வாரிசுகள்தான் என்றால் சரிதான். பார்வதி எனக்கு கிரையப்பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்தார். மேற்படி கிரையப்பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், இன்றுவரை நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் லிவின் குமார், கலாதேவி அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்தால்தான் உண்மை விவரம் தெரிய வரும் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court read over to the witness and acknowledge by

Interpreted

Him / Her To Be Correct

P SRIDEVI

Digitally signed by P SRIDEVI
Date: 2026.06.08 17:08:47 +0200

Subordinate Judge,
Kodumudi